DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.128/2022**

**prosecution witness: PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ராணி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>07.08.2024</u>

<u>முதல் விசாரணை:–</u>

1.நான் இராமேஸ்வரம் சுடுகாட்டன் பட்டியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். புகார்தாரர் சித்ரா என் உடன்பிறந்த சகோதரி ஆவார். புகார்தாரர் தற்போது கேரளாவில் வசித்து வருகிறார்.

2. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 09.00 மணியளவில் ஈஸ்வரி அம்மன் கோவில் அருகே என் அக்கா வேலைக்கு போன இடத்தில் அவரை கூட்டிக்கொண்டு வந்து இடது காலை உடைத்து விட்டார். என் அக்காவின் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். என் அக்கா நடக்க முடியாமல் இருந்ததால் நான் அவரை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். என் அக்கா சிகிச்சையில் இருக்கும் போது இராமேஸ்வரம் காவல்நிலையத்தில் இருந்து போலீசார் வந்து விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1.எனது அக்கா சித்ரா எதிரியுடன்அடிக்கடி சண்டைபோட்டு சுமார் 10 தடவைக்கு மேல் ஊரை விட்டு ஓடியுள்ளார் என்றால் சரிதான். அப்படி ஒவ்வொரு முறையும் சித்ரா ஊரை விட்டு ஓடும்போது எல்லாம் எதிரி தான் கண்டுபிடித்து வீட்டிற்கு கூட்டி வருவார் என்றால சரிதான்.

2. எனது அக்காவிற்கு ஒரு ஆண், இரண்டு பெண் குழந்தைகள் உள்ளது. எனது அக்கா ஊரை விட்டு செல்லும்போது பிள்ளைகளை விட்டு விட்டு தான் ஓடுவார் என்றால் சரிதான். பிள்ளைகளை பராமரிக்கவில்லை என்றால் சரிதான். 3 பிள்ளைகளையும் எதிரி தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். சமீபத்தில் திருமணம் நடந்த என் அக்கா மகளின் பெயர் என்ன என்றால் துர்கா. துர்காவிற்கு கல்யாணம் முடிக்கும் போது எனது அக்கா இல்லை என்றால் சரிதான். எதிரியின் மகள் துர்காவை எதிரி தான் எல்லா செலவும் செய்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். மீதமுள்ள இரண்டு பிள்ளைகளும் தற்போது வரை எதிரியின் பராமரிப்பில் உள்ளார்கள் என்றால் சரிதான்.

3.ஈஸ்வரி அம்மன் கோவிலுக்கும், நான் வசித்து வரும் வீட்டிற்கும் 1 1/2 கிமீ துாரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எனது வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் ஈஸ்வரி அம்மன் கோவில் முன்பு தான் நடந்தது என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து ஈஸ்வரி கோவிலுக்கு செல்ல வேண்டும் என்றால் 10 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்து முடிந்தபின்பு தான் சென்றேன் என்றால் சரிதான். அதனால் சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏற்கனவே என் அக்காவும், எதிரியும் சேர்ந்து வாழமால் இருந்தார்கள், என் அக்காவிற்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளார் என்றால சரியல்ல. சம்பவ நேரத்தில என் அக்கா என் வீட்டில் தான் குடியிருந்தார். சம்பவம் எனது வீட்டில் வைத்து நடைபெறவில்லை என்றால் சரிதான். வழக்கின் புகார்தாரர் எனது அக்கா என்பதால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.